# சிறுவர் அமுதம்

19.12.94

கிண்ணம் 5 எண்ணம் 2




சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

KINDERFREUNDLICHES MAGAZIN

அறிவை வளர்த்திட வேண்டும் - மக்கள்
அத்தனை பேருக்கும் ஒன்றாய் ;
சிறியரை மேம்படச் செய்தால் - பின்பு
தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும் ;



அன்புச் சிறுவர் சிறுமிகளே,

சிறுவர் அமுதம் சஞ்சிகை உங்களுக்குப் புத்தாண்டு வாழ்த்துக்களை முன்கூட்டியே வழங்குகிறது. வரும் தை மாதம் 14ம் திகதியோடு தனது ஆறாவது பிறந்தநாளைக் காண்கிறது. காலம் சென்ற ஆசிரியரைக் கௌரவிக்கும் நோக்கத்தோடு ஒவ்வொரு மாதமும் 19ம் திகதி வெளியாகி வருகிறது.

புதிய நிர்வாகத்தில் தனது ஆறாவது வயதை அடைகிறது. குழந்தைதானே, அதன் தவறுகள் மன்னிக்கப்பட வேண்டியவையே. ஆனால் அதைத் திருத்தி, நல்ல முறையில் வளர்த்தெடுப்பதில் வாசகர்களுக்கும் ஆக்கதாரர்களுக்கும் ' உரிமையுண்டு. அதனை ஆரோக்கியமாகவும் மாசற்றதாகவும் வளர்த்தெடுப்பதிலும் ' சம பங்குண்டு.

இம்முறை தொலைபேசி மூலமும் கடிதம் மூலமாகவும் சில தவறுகள் சுட்டிக் காட்டப் பட்டிருந்தன. சொற்களைக் கண்டு பிடியுங்கள் அடுத்தடுத்து ஒரே சொற்கள் வந்திருப்பதும், சில புதுச் சொற்கள் சேர்ந்திருப்பதும் சுட்டிக் காட்டி இருந்தார்கள். நாங்கள் புதுச் சொற்கள் ஒன்றும் சேர்க்கவில்லை, அவை தற்காலத்தில் இல்லாத சொற்களே தவிர புதுச் சொற்களல்ல. தமிழ்ச்சொற்கள் என்பது மட்டும் உண்மை. உங்களுக்குத் தெரியாத சொற்களை நாங்கள் எழுதியது எங்களது தவறே. இனிமேல் இப்படிப்பட்ட சொற்கள் வராமலிருக்கும்படி பார்த்துக் கொள்கிறோம்.

இதோ அவைகளிற் சிலவின் அர்த்தங்கள்:

கம் – ஆகாயம், வெளி, வெள்ளை
புரு – கணவன், அரசன்
மசி – –பூமி, பசு
கடு – விஷம், கடுமை, கெட்ட
திவவு – யாழின் நரம்புகள்

பம் எனவும் ஒரு சொல் வந்தது, அது எழுத்துப் பிழையெனவும் தெரிவித்துக் கொள்கிறோம்.

—அன்புடன்

ஆசிரியை—

# ஆராரரோ ஆரிரரோ



ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ

ஆரடித்து நீயழுதாய்
கண்மணியே கண்ணுறங்கு
கண்ணை அடித்தாரார்
கற்பகத்தைத் தொட்டாரார்

தொட்டாரைச் சொல்லியழு
தோள் விலங்கு போட்டு வைப்போம்
அடித்தாரைச் சொல்லியழு
ஆக்கினைகள் பண்ணி வைப்போம்

பாட்டி அடித்தாளோ
பாலூட்டும் கையாலே
அத்தை அடித்தாளோ
அமுதூட்டும் கையாலே

மாமன் அடித்தானோ
மகிழ்ந்தெடுக்கும் கையாலே
அண்ணன் அடித்தானோ
அணைத்தெடுக்கும் கையாலே

ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ

-சமரி சிவரட்ணராஜா -

## முல்லா கதைகள்



முல்லாவிற்குக் கழுதைச்சவாரி செய்வதில் விருப்பம் அதிகம். ஒருமுறை தனது கழுதையில் உலாவச் செல்லும்போது திடீரென்று கழுதை மிரண்டு தலைதெறிக்க ஓட ஆரம்பித்தது. உயிரைக் கையில் பிடித்தவாறு முல்லா கீழே விழுந்து விடாமல் அல்லாடிக்கொண்டிருந்தார்.

இந்தக் காட்சியைக் கண்ட ஒருவர் முல்லாவிடம் "என்ன முல்லா இவ்வளவு வேகமாக எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள்? என்ன விஷயம்?" என வினா எழுப்பினார். அதற்கு முல்லா "எனக்கென்ன தெரியும் என்னைச் சுமந்து செல்லும் கழுதையிடம்

கேட்டுப் பாருங்கள், சிலவேளையில் அதற்கு நேரமிருந்தால் பதில் கிடைக்கலாம்" என்றார்.

✵ கடிகார விளம்பரங்களில் மணி 10.10 காட்டுவதைப் பார்க்கலாம். இந்தப் 10.10க்கு என்ன விசேஷம் தெரியுமா? ஆபிரகாம் லிங்கன் சுடப்பட்ட நேரத்தை உலக மக்களுக்கு நினைவு படுத்தக் கடிகாரத் தயாரிப்பாளர்கள் 10.10தைக் காட்டி லிங்கனை நினைவூட்டி வருகிறார்கள்.

## விசித்திர விளம்பரம்

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பு, பேனாவும் மையுமில்லாமல் நீங்கள் எழுதலாம். விபரம் அறிய ஒரு மார்க் மணியோர்டர் செய்யவும் என பத்திரிகைகளில் ஒருவர் விளம்பரம் கொடுத்தார். அவருக்கு மணியோடர்கள் ஏராளமாகக் குவிந்தது. பணம் அனுப்பியவர்களுக்கு உடனே பதில் போஸ்கார்ட்டில் வந்தது.


"புத்திசாலிகளே பென்சிலைப் பயன் படுத்துங்கள்"

---சமரன் விக்னேஸ்வரன்--

ஒரு தாய் பத்து குழந்தைகளைக் கண்ணை இமை காப்பதுபோல் காப்பாற்றுகிறாள். ஆனால் பத்து குழந்தைகளும் வளர்ந்தபின், ஒன்று சேர்ந்து ஒரு தாயைக் காப்பாற்றியதாக வரலாறே இல்லை.

யூதப் பழமொழி

# பலமில்லாத போது



தனது இறப்பை எதிர்பார்த்துக் கொண்டு மரணப்படுக்கையில் படுத்துக் கிடந்தது அந்தச் சிங்கம். இதுவரைக்கும் அதனைப் பார்த்தாலே நடுநடுங்கிய மிருகங்கள், அது முன்பு தமக்குச் செய்த கொடுமைகளுக்கு இப்போது அதை அடித்துத் துன்புறுத்திக் கொண்டிருந்தன.

ஆனால் ஒரு குதிரை மட்டும் தனியே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

காட்டுப்பன்றி ஒன்று "ஏன் நண்பா இச்சிங்கம் உனது தாயைக் கொன்றும் நீ ஏன் அதை அடிக்காமல் சும்மா இருக்கிறாய்?" என்று கேட்டது. அதற்குக் குதிரை, "அதையா கேட்கிறாய்? அந்தச் சிங்கம் பலத்துடன் இருக்கும்போது அதை நான் அடித்திருந்தால் பரவாயில்லை. இனிமேல் அது எனக்கு ஒன்றும் செய்யாதே, இனி அதை அடித்தால் என்ன? அடிக்காமல் சும்மா விட்டால் என்ன?" என்றது.

## *சில நாடுகளின் சுதந்திரதினங்கள்*

இலங்கை – பெப்ரவரி 4
கனடா – ஜூலை 1
சீனா – ஒக்டோபர் 10
பிரான்ஸ் – ஜூலை 14
இந்தியா – ஓகஸ்ட் 15
அமெரிக்கா – ஜூலை 4
இத்தாலி – மார்ச் 26
ஜப்பான் – ஏப்ரல் 29
நோர்வே – மே 17
சுவிற்சர்லாந்து – ஓகஸ்ட் 1
துருக்கி – நவம்பர் 1
போர்த்துக்கல் – ஒக்டோபர் 5

# மனிதனின் சக்தி



எருது ஒன்று உழவனொருவனின் வயலை உழுது கொண்டிருப்பதை புலி ஒன்று கண்டது. புலி எருதிடம் சென்று "எருதே உனக்கு எவ்வளவு பலமிருந்தும் நீ எதற்காக ஒரு மனிதனிடம் அடிபணிகிறாய் உனது எஜமானை உனது கூர்மையான கொம்பினால் கொன்றுவிட்டு நிம்மதியாக இருப்பதுதானே" எனக் கூறியது. அதற்கு எருது "மனிதன் பார்ப்பதற்குத்தான் சிறியவன், ஆனால்

அவனது பலம் பெரியது" எனக் கூறியது. புலிக்கு எருது சொல்வதைச் சோதித்துப் பார்க்க ஆசை உண்டானது.

அதனால் புலி உழவனிடம் சென்று "மானிடா உனது பலத்தை ஒருமுறை எனக்குக் காட்டு" என்று கேட்டது. உழவன் அதற்கு "நான் எனது பலத்தை வீட்டில் விட்டு வந்துவிட்டேனே! புலியே நீ என்னுடன் என் வீட்டிற்கு வா, என் பலத்தைக் காண்பிக்கிறேன்" என்று சொன்னான். புலி மனிதனின் யோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை "இன்றே இந்த இடத்திலேயே உனது பலத்தைப் பார்க்க வேண்டும்" எனப் புலி அடம்பிடிக்கத் தொடங்கியது.

பின்பு உழவன் "புலியே, நீ இங்கேயே இரு, நான் வீட்டிற்குச் சென்று அதை எடுத்துக் கொண்டு வருகிறேன்" எனக் கூறினான். புலி இதற்குச் சம்மதித்தது. "ஆனால் எனது வீட்டிற்குச் செல்லப் பல நேரம் செல்லும், நான் வரும் முன்பு நீ பொறுமை இழந்து அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டால் நான் என்ன செய்வது?" என்று கேட்டுவிட்டு யோசிப்பது போல பாவனை செய்தான் உழவன். பின்பு அவன் புலியிடம் "நான் உன்னை ஒரு கயிற்றினால் கட்டுகிறேன் பின்பு நான் வந்தவுடன் அதை அவிழ்த்து விடுவேன்" என்று கூறினான்.

புலிக்குத் தான் பொறுமையிழந்தால் மனிதனின் சக்தியைப் பார்க்கமுடியாதே எனப் பயம் ஏற்பட்ட படியால் உழவனின் திட்டத்திற்கு உடன் பட்டது. உழவனும் புலியைக் கயிற்றினால் கட்டினான். பின்பு ஒரு தடியால் புலியை அடிக்கத் தொடங்கினான். அதன்பின் "எனது பலம் இத்தடியும் கயிறும்தான்" எனக் கூறி புலியை அவிழ்த்து விட்டான். புலியும் தப்பினோம் பிழைத்தோம் என்று காட்டிற்கு ஓடியது.

## புத்தாண்டு



பூத்து வரும் புத்தாண்டில்
புத்தம் புது மலர் தொடுத்து
புது அமுதாய் கவி வடித்து
பாரெல்லாம் உன் புகழ் பாட
திகட்டாத அமுதமாய் நீ திகழ
என் புத்தாண்டு வாழ்த்துக்கள்



சிவகுமார் சிவசுப்பிரமணியம்



# சார்லி சாப்ளின்



ஆண்டர்ஸன் மிக உற்சாகத்துடன் வந்தார். "என் நண்பர் ஸ்பூர் வந்து இது சம்பந்தமாக முடிவெடுப்பார், என்று உடனேயே விடை பெற்றுக் கொண்டு சென்று விட்டார். சார்லிக்கோ திரும்பவும் ஏமாற்றம் தான். ஆனாலும் தன்னைத் தேற்றிக் கொண்டு ஸ்பூரின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

ஸ்பூரின் முடிவு சாதகமாக முடிந்து விட்டால் கீஸ்டோன் படக் கொம்பனியினரின் கடைசிப் படமான "His prehistonic past"ஐ விரைவாக முடித்துக் கொடுத்து விட வேண்டும். கீஸ்டோன் கொம்பனியாருடன் வாழ்ந்தது ஓராண்டு தான் என்றாலும், அவர்களைப் பிரிவது சார்லிக்கு மிகவும் கவலையாக இருந்தது. படத்தையும் முடித்துக் கொடுத்தாயிற்று. ஸ்பூரின் வருகை தாமதமாகவே ஆன்டர்ஸனை சான்பிரான்சிஸ்கோவில் சந்தித்து உரையாடினார்.

ஆன்டர்ஸன் சார்லியை அன்புடன் வரவேற்று உபசரித்தார். பின் தன் காரிலேயே ஸ்ரூடியோவுக்கு

அழைத்துச் சென்றார். எஸ்ஸென்னே நிறுவனத்தின் பங்குதாரர்களில் ஒருவரான ஸ்பூரின் சொந்தப் பெயரிலேயே (பிரான்கோ பில்லி வெஸ்ரன் ஸ்ரூடியோ) ஸ்ரூடியோ அமைந்திருந்தது. ஸ்ரூடியோ ஒரு சின்னக் கிராமத்தில் இருந்தது. அழகிய கிராமச் சூழலில் ஸ்ரூடியோ அமைந்திருந்தது சார்லியின் மனதை ஈர்த்தது.

ஆண்டர்ஸன் சார்லியைச் சிக்காகோ நகரத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கேயும் ஸ்பூர் இருக்கவில்லை. தொழில் விஷயமாக வெளியூருக்குச் சென்று விட்டதாக் அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர். சார்லிக்கோ ஸ்பூர் என்பவர் இருக்கிறாரா இல்லையா என்பதே சந்தேகமாக இருந்தது. ஆனால் ஆண்டர்ஸன் மட்டும் எப்போதும் போல உற்சாகமாகவே காணப்பட்டார். சார்லி மீது அனருக்கு ஒருவிதமான பரிவும் மரியாதையும் ஏற்பட்டிருந்தது.

ஸ்பூரைப் பற்றிய சிந்தனையைக் கைவிட்டு அடுத்த படத்திற்கான ஆக்க வேலைகளில் சார்லி ஈடுபடத் தொடங்கினார். எஸ்ஸென்னே நிறுவனத்திற்கு தான் ஒரு படத்தை முடித்துக் கொடுத்து விட்டால் அவர்களின் நன்மதிப்பைப் பெற்றுவிட முடியும் என்று சார்லி நம்பினார். நம்பியதோடு நின்று விடவில்லை. ஆக்க வேலைகளில் முழுமூச்சாக இறங்கினார். படப் பிடிப்பு சிக்காகோவில் இருந்த ஸ்ரூடியோவில் தொடங்கியது. படத்தின் பெயர் "HIS NEW JOP" (இன்னும்)

# தும்மல்



யாராவது தும்மினால் அருகிலிருப்பவர்கள் *தீர்க்காயுசு* என்று சொல்வதை நீங்கள் பார்த்திருக்கலாம்.

அராபியர்கள் *பரமஹல்லா* (கடவுள் உன்னிடம் கருணை காட்டட்டும்) என்பார்கள்.

பார்சிகள் *ஜுவ்ஹோ* (உயிரோடு இரு) என்றும் துருக்கிகள் *மங்கசல்லா* (கடவுள் உன்னைக் காப்பாற்றுவார்) என்றும் கூறுவது வழக்கம்.

**அனைத்து நாட்டவரும் தும்மலைக்கண்டு பயப்படுவதற்குக் காரணமான ஹீப்ருக்களின் கதை ஒன்று உள்ளது.**

பற்பல காலத்துக்கு முன்பு மனிதர்கள் தும்மினால் அவர்கள் இறந்து போனார்கள். யாகோப் என்ற ஒருவர், மனிதர்கள் தும்மியதும் இறக்காமல் இருக்க கடவுளைப் பிரார்த்தித்தார். அவரது



வேண்டுதலுக்குப் பின்பு ஒருமுறை யாகோப் தும்மினார். அருகிலிருந்தவர்கள் பயந்து நடுங்கினார்கள். அவர் இறக்கமாட்டார், கடவுள் காப்பாற்றுவார் என்று கூறினார்கள். யாகோப் இறக்கவில்லை. அன்றிலிருந்து எல்லா நாட்டு மாக்களும் யாராவது தும்மினால் கடவுள் காப்பற்றட்டும் என்பதைப்போன்ற அர்த்தமுள்ள வாசகங்களைச் சொல்லத் தொடங்கினார்களாம்.

**பிரான்ஸ், இங்கிலாந்து நாட்டு மக்கள் வேறு வகையான ஒரு கதையைச் சொல்கிறார்.**

கிபி 589ஆம் ஆண்டு முதன் முதலாக ரோம் நகரில் பிளேக் நோய் பரவியது. நோய் கண்டவனுக்கு அறிகுறி தும்மல்தான். யாராவது தும்மினால் பக்கத்தில் இருப்பவர்கள் பிளேக் நோய் தமக்குப் பரவினாலும் எனப் பயந்து கொண்டு கடவுள் உன்னைக் காப்பாற்றட்டும் எனச் சொல்லியவாறு ஓடுவார்களாம்.

**ஆனால் விஞ்ஞானமுறைப்படி மட்டும் தும்மல் உடலிற்கு நல்லதாக இருக்கிறது.**

தோல்வி, உங்கள் நேரத்தை வீணடித்து விட்டீர்கள் என்பதற்கு அடையாளமல்ல.... உங்கள் நேரத்தை இன்னும் பல முயற்சிகளுக்குக் பயன் படுத்திக் கொள்ளலாம் என்பதற்கான அடையாளம்.

ராபர்ட் எச். ஸ்கல்லர்

# ஔவையார்



வழி நடந்த ஔவை உறையூரை அடைந்தார். அப்போது நள்ளிரவாகி விட்டது. பசியாகவும் இருந்தது. தம்முடைய துணி மூட்டையில் இருந்து தினை மாவை எடுத்தார்.

அதே வேளையில் மாறு வேடத்தில் நகரத்தைச் சேதனை செய்து கொண்டு வந்த சோழ மன்னன் ஔவையாரிடம் அதைப் பற்றிக் கேட்டான். ஔவை தனக்குக் குறமகள் தினைமா தந்த விடயத்தைக் கூறினாள்மாறு வேடத்தில் இருந்த சோழமன்னன் தான் யார் என்பதை ஔவைக்குத் தெரியப் படுத்தினான்.

பின் ஔவையைப் பணிந்து புலவரே, நாளை அரண்மனையில் இராசசூய யாகம் நடத்துகின்றேன். நீங்கள் வந்து ஆசீர்வதிக்க வேண்டும், என்று கேட்டான். சோழநாட்டில் நடந்த இராசசூய யாகத்தில் ஔவையார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். சேரமன்மனன், பாண்டியமன்னன், சோழமன்னன் மூவரையும் ஒன்றாகச் சேர்த்து ஔவையார் வாழ்த்தினார்.

அவர்களிடம் விடை பெறும் வேளைறில் ஔவையாருக்கு தனக்கு மழை நேரத்தில் ஆடைதந்த ஆயர்மகளின் ஞாபகம் வந்தது. மூவேந்தரையும் பார்த்து அவள் அநாதை என்பதையும் அவளுக்கு மூவரும் ஒன்றாக்ச் சேர்ந்து திருமணம் நடத்தி வைக்க வேண்டும் என்றும் வேண்டினார். மூவரும் அதற்கு உடன்பட்டனர்.

ஔவையார் தானே ஆயர்மகளுக்குப் மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்தார். யாவருக்கும் அழைப்பு விடுத்தார். மூவேந்தர்களும் மூன்று பந்தல்கள் அமைத்தனர். மிகவும் விமரிசையாக ஆயர்மகளின் திருமணம் நடைபெற்றது. ஔவையார் மூவேந்தர்களுக்கும் தனது அன்பைத் தெரிவித்து மெச்சினார். அக்கிராமம் அன்று தொட்டு இன்றும் முப்பந்தல் என்று வழங்கி வருகிறது.

(தொடரும்)


E.V.S Publishers சிலிருந்து.

# வீரன்

ஒரு ஊரில் வடிவேல் என ஒரு ஏழை மனிதன் வாழ்ந்து வந்தான். அவன் படிப்பறிவு இல்லாதவன். அதனால் அவன் படகொன்று கட்டி அதிலிருந்து வேறு வேறு இடங்களுக்குச் சென்று பல பொருட்களை விற்றுக் கிடைத்த பணத்தினால் தன்னைக் காப்பாற்றிக் கொண்டான்.

ஒரு நாள் அவன் படகில் போகும்போது காற்றுப் பலமாக வீசத் தொடங்கியது. மின்னல் மின்னியது. இடி இடிக்கத் தொடங்கியது. அவன் படகு திசை தவறி எங்கேயோ சென்றது. வடிவேலால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. படகுக்குள் நீர் வந்து படகு தாழத் தொடங்கியது. அவன் அலைகளால் அடித்துச் செல்லப் பட்டு ஒரு நாட்டின் கரையை அடைந்தான். கரையில் அவன் மயக்கமாகக் கிடந்தான்.

அடுத்த நாட்காலை ஒரு அழகான பெண் அந்தக்கரைக்கு வந்தாள். அவள் வடிவேலுவுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் கொடுத்து மயக்கத்தைத் தெளிவித்து, அவனை அழைத்துக் கொண்டு தன்



வீட்டுக்குச் சென்றாள். அவள் ஒரு குடிசையில் தன் தகப்பனோடு வாழ்ந்து வந்தாள். அவளுக்கு அகிலா என்று பெயர். அவளுடைய கண்கள் மீனைப் போல அழகாக இருந்தன. ரோசாவின் சிவந்த நிறம் அவள் உதடுகளில் தெரிந்தது. கருமையான தலைமயிர் அவளுக்கு மேலும் அழகைக் கொடுத்தது.

அவளின் தந்தை அழகென்றில்லை. இறந்து விட்ட தாயாரைப் போல அகிலா அழகாக இருந்தாள். தந்தை மீன் பிடித்து விற்று வாழ்ந்து வந்தார். ஒருநாள் இரவு வடிவேலு நித்திரை வராமல் தவித்தான். அதேவேளை அகிலா கடற்கரைக்குச் செல்வதைக் கண்டு அவளின் பின்னே சென்றான். அவள் கடற்கரையில் நீண்டதூரம் நடந்து சென்று திடீரென்று நின்றாள்.

கடலிலிருந்து கால் முளைத்த விசித்திரமான மீனொன்று வெளியே வந்து அவளை இழுத்துச் சென்றது. ஆனால் அகிலா ஒன்றும் செய்யவில்லை. அகிலா கண்ணைத் திறந்தபடியே மயக்கமாக இருப்பதைப் போலத் தெரிந்தது. வடிவேல் ஒரு படகை எடுத்துக் கொண்டு கடலில் மீனைத் தொடர்ந்து சென்றான். திடீரென்று மீன் நீருக்குள் மூழ்கியது. வடிவேலும் படகை விட்டு நீருக்குள் மூழ்கினான்.

கடலுக்கு அடியில் அழகான பல பெண்களை அந்தமீன் ஒரு கூட்டில் அடைத்து வைத்திருக்கக் கண்டான். அருகிலேயே ஒரு வாள் கிடந்தது. அந்த வாளால் மீனை வெட்டி அனைவரையும் காப்பாற்றினான். நன்றிக் கடனாக அகிலாவின் தந்தை அகிலாவை

வடிவேலுவுக்குத் திருமணம் செய்து வைத்தார். வடிவேலும் அகிலாவும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர்.

கௌஷிகன் ராதாகிருஷ்ணன்–

Denmark.

## ஆதவன் மாமா எழுதுகிறேன்


அன்புச் சிறார்களே!

சென்ற முறை நான் எழுதியதைப் பலரும் படித்து நன்றி தெரிவித்தீர்கள். நன்றி.

✧ ✧ ✧ ✧ ✧

மிகப் பழைய வாழ்ந்த விலங்குகள், தாவரங்கள் என்பவற்றின் எலும்புக்கூடுகள், தடயங்கள் என்பவை பாறைகளில் பதிந்து இருக்கும். அந்தப் பாறைகள் மண்ணால் மூடப்பட்டிருக்கும். அந்த மண்ணை கிண்டிக் கிளறிப் பாறைகளில் பதிந்திருக்கும் "உயிர்ச் சுவடுகளை" அவற்றின் அமைப்புக் கெடாமல் சேகரிப்பது என்பது சுலபமான காரியம் அல்ல.

டைனோசௌரியாக்களின் எலும்புக்கூடுகள் "உயிர்ச் சுவடுகள்" என்பவை உலகின் பல பகுதிகளில் காணப் படுகின்றன. ஒரு நூதனசாலையின் அழைப்பின் பெயரில் பல விஞ்ஞானிகளைப் கொண்ட ஒரு குழு எலும்புக்கூடுகள் காணப்படும் இடத்திற்குச் செல்லும் அந்த இடத்தை அவர்கள் ஆராய்ந்து அங்குள்ள



எலும்புக் கூடுகளை சேகரிப்பார்கள். உயிர்ச் சுவடுகள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு இருப்பவர்களை ஆங்கிலத்தில் Paleontologist என்று அழைப்பார்கள்.

இவர்கள் மிகச் சிறிய ஊசிகளைக் கொண்டு எலும்புத் துண்டுகளைக் கோர்ப்பார்கள். பாறைகளில் படிந்துள்ள எலும்புக்கூட்டுத் துண்டுகளை அதிலிருந்து பிரித்தெடுப்பதற்குச் சில இரசாயன மருந்துகளை உபயோகிக்கிறார்கள். எலும்புத் துண்டுகள் 220 மில்லியன் வருடப் பழையவை என்பதனால் அவை உடைந்து விடக் கூடியவை அல்லவா? அதனால் அதைப் பாதுகாப்பதற்கு நனைந்த ஒட்டக் கூடிய "பிளாஸ்ரர்" போன்ற மெல்லிய துணிகளால் அவற்றை மூடுகிறார்கள். இந்தத் துணிகள் காய்ந்தவுடன் எலும்புத் துண்டுகளுடன் இறுக்கமாக ஒட்டிக் கொண்டு விடுகின்றன.

பின்னர், எந்த நாளில் அவற்றை எங்கே எடுத்தோம் என்பன போன்ற விபரங்களை ஒரு "லேபல்" மாதிரி ஒட்டி நூதனசாலைக்கு அனுப்புகிறார்கள். நூதனசாலையோ வெகுதொலைவில் இருக்கக் கூடும். இந்தச் சிறிய எலும்புத்துண்டுப் "பொதி" கப்பல்களிலும், விமானங்களிலும் பயணம் செய்தே நூதனசாலையை அடைய வேண்டியிருக்கும்.

நூதனசாலையை அடைந்தவுடன் அங்குள்ள ஆய்வுகூடத்தில் உள்ள விஞ்ஞானிகள் மிக நுட்பமாக

அவற்றில் ஒட்டியிருக்கும் பிளாஸ்ரர் துணியை அகற்றுவார்கள். அதி சக்தி வாய்ந்த "நுணுக்குக்காட்டி" (MICROSCOPE) மூலம் ஒரு சிறிய எலும்புத்துண்டு மிகப் பெரிய உடலைக் கொண்ட டைனோசௌரியாவின் எந்தப் பகுதிக்குரியது என்பதைத் தீர்மானிப்பார்கள். சில சமயங்களில் அதன் முழு உடலையும் சிறிய சிறிய எலும்புத்துண்டுகளால் பொருந்தி அதனை வடிவமைப்பதற்கு விஞ்ஞானிகள் ஓவியர்களின் உதவியையும் (COMPUTER) கணனியின் உதவியையும் நாடுவதுண்டு.

இன்று முழு வடிவத்துடன் உருவமைக்கப்பட்ட (DIPLODOCUS) டிப்ளோடோக்கஸ் என்ற டைனோசௌரியாவே நூதனசாலைகளில் காணப்படும் சிறந்த அமைப்பு என விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். இதனை அமைப்பதற்கு ஒரு ஆய்வுகூடத்தில் 20 விஞ்ஞானிகள் மூன்று வருடங்கள் இரவு பகலாக உழைத்தனராம்.

✧ ✧ ✧ ✧ ✧

வடிவமைக்கப்பட்ட டைனோசௌரியாக்கள் மூலம் அவற்றின் வாழ்க்கைமுறை பற்றிய சில ஊகங்களை விஞ்ஞானிகள் சொல்கிறார்கள்.

'PACHYCEPHALOSAURUS' பாக்கீவ்லசோரஸ் என்ற வகை டைனோசௌரியாக்கள் மிகவும் தடித்த மண்டை ஓட்டைக் கொண்டிருந்தனவாம். செம்மறி ஆட்டின் மண்டையோடுகளும் தடித்தவையே. ஏனென்றால்

அவை சண்டையிடும் போது தலையையும் தலையையும் மோதியே சண்டை செய்கின்றன. சண்டையின் போது தலையிலுள்ள மூளை பாதிப்படையக் கூடாது என்பதற்காக அவற்றின் மண்டையோடுகள் தடிப்பாக இருக்கின்றன. இதிலிருந்து 'பாக்கீவ்லசோராஸ்'கள் பயங்கரமாகச் சண்டை செய்தே வாழ்ந்திருக்கின்றன என்ற முடிவுக்கு விஞ்ஞானிகள் வருகின்றனர்.

ஆண் டைனோசௌரியாக்களும் பெண் டைனோசௌரியாக்களும் ஏனைய விலங்குகளைப் போலவே உருவத்திலும் நிறங்களிலும் சிறிய சிறிய வித்தியாசங்களைக் கொண்டிருந்தன என்று சொல்கிறார்கள்.

வாத்துப் போன்ற ஆனால் பெரிய வடிவமைப்பைக் கொண்ட (PARASAUROLOPHUS) பராசௌரோலபஸ் என்கிற டைனோசௌரியாக்கள் எலும்புக் கூடுகளை ஆராய்ந்த விஞ்ஞானிகள் ஆண் இனத்தின் தலையில் நீண்ட உலக்கை போல ஒரு கொம்பு இருந்தது எனவும் பெண்ணினத்தில் அந்தக் கொம்பு இருந்திருக்கவில்லை எனவும் சொல்கிறார்கள். குழந்தை டைனோசெறரியாவுக்கும் பெற்றோர் டைனோசௌரியாவுக்கும் இடையில் உருவத்தில் சிறிய வித்தியாசத்தை அவதானித்தார்கள்.

கொரித்தோஸரஸ் (CORYTHOSAURUS) வகையின் குழந்தைகள் நீண்டவாலையும் பெற்றோர்கள் நீளம்

குறைந்த வாலையும் கொண்டிருந்தன. அதேபோல் பெற்றோர்கள் தலையில் ஒரு குண்டுச் சட்டி (வாணலி) போல் கனத்த இறுக்கமான தலைப்பாகையைக் கொண்டிருந்தன. குழந்தைகளுக்கு அந்தத் தலைப்பாகை இருக்கவில்லை. வயது வந்ததும் தலைப்பாகை கட்டிக் கொள்வார்களாம். (ஆட்டின் கொம்பு போல) அப்பொழுதுதான் சண்டை செய்யலாம் என்பதற்காக.

இவை எல்லாவற்றையும் ஊகித்துச் சொல்ல முடிந்த விஞ்ஞானிகளால் மூன்று கேள்விகளுக்கு மட்டும் விடை கண்டு பிடிக்க முடியவில்லை. அவை என்ன தெரியுமா?

(1) அவற்றின் நிறம் என்ன?
(2) அவை எவ்வாறு சத்தமிட்டன.?
(3) எப்படி உறங்கின, விழித்தன?

என்பவை தான் அந்தக் கேள்விகள். இந்தக் கேள்விகளுக்கு விடை காண்பதற்காக இப்பொழுது டனோசௌரியாவின் அமைப்பிலுள்ள விலங்குகள் எப்படி வாழ்கின்றன என அவதானித்து அப்படியே அவையும் இருந்திருக்கலாம் என அனுமானிக்கிறார்கள். ஆனால் அது உண்மையல்ல. ஒரு ஊகம் தான்.

சரி, சிறார்களே மீண்டும் அடுத்த முறை சந்திப்போம்.

இப்படிக்கு

ஆதவன்மாமா

# வினா விடைப் போட்டி

1. இலங்கையின் உயரமான மலைகளில் ஒன்றான இது எல்லா மதத்தினரும் மதிக்கும் தலமாகவும் விளங்குகிறது?

*சிறப்பு. உவர்ப்பு. பொன்னொளி. பளிங்கு. வெண்பா. பாதசாரி. மரபு. கலைஞன்.*

2. ஆபிரிக்கக் கண்டத்துக்கு இப்படியும் ஒரு பெயர் உண்டு?

*இரும்பு. கருமை. அண்ணன். பாடகன். பாகம். எண்ணம். மாடம். சம்பளம்.*

3 தங்கம் கூடுதலாக விளையும் நாடு எது?

*தெளிவு. இன்பம். கானா. சுரப்பி. பரிவு. தேக்கு. மகான்*

4. தென் கிழக்காசியாவில் கிறீஸ்தவர்கள் அதிகம் உள்ள நாடு எது?

*பிரியம். பலிபீடம். வெப்பம். அகப்பை. கஃவம். ஸ்பெயின்.*

5. உலகிலேயே மிக நீளமான தேசியகீதத்தைக் கொண்ட நாடு எது?

*மகிழ்ச்சி. இரேகை. தக்காளி. பகல். நாடு. கூடு*

முடிவு திகதி 12.1.94

# கண்டு பிடியுங்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வி | ட | ய | ம் | க | டி | த | ம் | த | பா |
| ண் | டு | ஆ | ப | ர | ண | ம் | க | வா | வி |
| ண | ம | ணி | கோ | ம் | ப | தா | ரி | ப | வா |
| ப் | சி | ர | ம் | த | க | தி | பா | ரை | த |
| ப | ரு | த் | தி | ர | வி | ய | ம் | பூ | ம் |
| ம் | ணி | து | ரு | பா | ட | ல் | ய | வ | ர |
| ர | வா | ற | ம | க | ரி | ஷி | ம் | ர | தி |
| கா | ச | வு | தி | ன் | ப | ண் | ட | ம் | த் |
| ங் | ல் | கூ | தை | சி | ட் | டு | ட் | ர | சி |
| சி | பு | ப் | சீ | ரு | டை | சு | தி | தை | வி |

முடிவுதிகதி 10.1.94

துன்பத்தையும் துயரத்தையும் சகித்துக் கொள்வதை விட வாழ்க்கையில் பெரிய அனுபவம் கிடையாது.

—சாமுவேல் ஜான்சன்—



பத்துக் குருடர்கள் ஆற்றின் அக்கரைக்குப் போக முல்லாவிடம் உதவி நாடினார்கள். முல்லா "எனக்கு வேறு வேலை உள்ளது, உங்களுடன் பொழுதைக் கழிக்க முடியாது" என்றார். குருடர்கள் "எங்களில் ஒருவரைக் கொண்டு போய் விடுவதற்கு ஒரு ரூபாய் விதமாகப் பத்துப் பேருக்கும் பத்து ரூபாய் தருகிறோம்" எனக் கூற முல்லா இதற்குச் சம்மதித்தார்.

ஆனால் முல்லா பத்துப் பேரை கரைக்குக் கொண்டு சேராமல் ஒன்பது பேரை மட்டுமே கரைக்குக் கொண்டு போய்ச் சேர்த்தார். குருடர்களுக்கு இது விளங்கி விட்டது எனவே "நீங்கள் எங்கள் பத்துப் பேரையும் கரைக்குச் சேர்த்தால்தான் பத்து ரூபாய் தருவோம்" என்றார்கள். "அப்படியானால் சரி, ஒன்பது ரூபாய் தாருங்கள், உங்களுக்கும் லாபம்தானே" என்றார் முல்லா.

## பொங்கல் வாழ்த்து

உழவர் திருநாளாம்
தமிழர் பெருநாளாம்
இன்னமுதப் பொங்கலிட்டு
முக்கனிகள் படையலிட்டு
இறைவனை நாம் வணங்கி
கொண்டாடும் திருநாளாம்
தைப்பொங்கல் திருநாளாம்
பொன்னான இந்நாளில்
பெரு அமுதாய் பெருகி
வான் உயர வளர்ந்து- நீ
சிறுவர்க்கெல்லாம் அமுதமாய்
சிறப்புடன் வலம் வர- என்
இனிய பொங்கல் வாழ்த்துக்கள்




-வித்தியா சிவசுப்பிரமணியம்-

# எண்பாட்டு

ஒன்றும் ஒன்றும் இரண்டு
ஓடாதே நீ மிரண்டு
இரண்டும் இரண்டும் நான்கு
இனிய பெயரை வாங்கு
மூன்றும் மூன்றும் ஆறு
முன்னே நின்று கூறு
நான்கும் நான்கும் எட்டு
நன்றாய்ச் சொன்னால் லட்டு
ஐந்தும் ஐந்தும் பத்து
அதுவே போதும் நிறுத்து



கௌரியன் குலேந்திரன்
Düsseldorf

# வினாவிடைப் போட்டி முடிவு

1. கொலம்பஸ் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
*இஸ்லாம். கத்தல். தானியம். வேலி (இத்தாலி)*

2. உலகப் பிரசித்தி பெற்ற இந்த நினைவு மாளிகை வட இந்தியாவில் உள்ளது. அதன் பெயர் என்ன?
*தாய். மும்தாஜ். மனிதன். மழைக்காலம் எல்லை.(தாஜ்மகால்)*

3. எந்த நாட்டில் மிகப் பெரிய புகையிரதப் பாதை உள்ளது?
*அச்சம். மென்மை. தெரிவு. ஊக்கம். காலம். (அமெரிக்கா)*

4. பிரேசில் நாட்டில் பேசப்படும் மொழி என்ன?
*போர்வை. கர்மம் . பத்து. துறவி. விக்கல். கீழ். சுந்தரம். (போர்த்துக்கீசு)*

5. தன் இன மக்களுக்காகப் போராடி வெற்றி கண்டு பின் நாட்டின் தலைவரான தென்னாபிரிக்கர் யார்?
*நெருப்பு. எல்லை. கசப்பு. நன்மை. மது. தண்ணீர். மாட்டேன். பலா. (நெல்சன் மண்டேலா)*

6. கன்னியாகவே வாழ்ந்த இங்கிலாந்து அரசி யார்?
*முதலை. பந்தல். எல்லாம் . செம்பு. எண்ணம். பல்லி. கசப்பு. பெருமை. சத்தம். (முதலாம் எலிசபெத்)*

விடைகள் எழுதியோர் விபரம்

சிவாஸ்கர் சிவராஜா Duisburg
சிவதர்சினி சிவராஜா Duisburg
மேகலை மகேந்திரன் Meerbusch
சுகிர்தன் திருச்செல்வம் Danmark
வித்தியா சிவசுப்ரமணியம் Selm
சிவகுமார் சிவசுப்ரமணியம் Selm
சுதர் ஸ்ரீஸ்கந்தராஜா Duisburg
சுவேதா ஸ்ரீஸ்கந்தராஜா Duisburg
ஜனார்த்தனி குணரட்ணம் Ennepetal
றேகா தியாகேஸ்வரன் Bochum
ஜெய்பிரபா தியாகேஸ்வரன் Bochum
மஞ்சுளா சிவசம்பு Lohmar
ஜெயானந்தன் கண்ணன் Berg.gladback
அனுஷா சிவா Hagan
கந்தவனம் பிரகாஷ் Norway
அகன்யா அருளானந்தசிவம் Remscheid
அஜந்தன் அருளானந்தசிவம் Remscheid
ஜெயதீபா இரத்தினசபாபதி Eschelbronn
நிஷாந்தி தியாகராஜா Denemark
மோகன் இரத்தினசபாபதி Eshelbronn
கௌரியன் குலேந்திரன் Düsseldorf
ராகுலன் சிறீஜீவகன் Kamen
ராகவன் சிறீஜீவகன் Kamen
முகுந்தன் மகேந்திரன் Berg.Gladbach
சமரி சிவரட்ணராஜா Olsberg
பாலகௌரி இராசையா Bremen
கிரிசாந் மனோறஞ்சிதராஜா Münster

பாலகௌரி இராசையாவிற்குப் பரிசு.

# தைப்பொங்கல்

ஒவ்வொரு வருடமும் தைமாதத்து முதல் நாளிலே கொண்டாடப்படும் பண்டிகை தைப்பொங்கல். இதைத் தமிழர் திருநாள் என்று சொல்வார்கள். ஆனாலும் உழவர் திருநாள் என்று சொல்வது சாலப் பொருந்தும். உலகில் உயிரினங்கள் உயிர் வாழ்வதற்கு உணவு அவசியம். அந்த உணவை உழவர் பயிர் செய்வதற்கு மழையும் வெய்யிலும் வேண்டும். அவைகள் சூரியனாலே பணச்செலவின்றிக் கிடைக்கிறது.

தை மாதத்திலே நெல், பயிர்கள் எல்லாம் பெரும்பாலும் விளைந்து விடும். கரும்பு முற்றிவிடும். பழங்கள் கனிந்து விடும். ஏனைய மற்றப் பயிர்களும் பயன் தரத் தொடங்கிவிடும். உழவர் பட்ட கஷ்டங்கள் நீங்கி விளைந்த பயிர்களைக் கண்டு குதூகலிக்கும் நாள். இதைச் சூரியனுக்கு நன்றி செலுத்தும் நாளாக உழவர்கள் கொண்டாடுவார்கள். உணவைத் தரும் சூரியனுக்கு நன்றியைச் செலுத்தும் முகமாக இந்நாளை நாமெல்லோரும் கொண்டாடுகிறோம்.

இல்லங்களெல்லாம் புதுப்பொலிவுடன் திகழ, கதிரவன் பொங்கலன்று உதயமாகும் பொழுது நாம் புத்தாடை புனைந்து புதுப்பானையில் பொங்கல் வைத்து பால் பொங்கி வரும்வேளை அனைவரும் கூடி நின்று

"பொங்கலோ பொங்கல்" எனக் குதூகலமாகக் கதிரவனை வணங்குவது வழக்கம். அதன்பின் உற்றார் உறவினருடன் உண்டு மகிழ்ந்து கொண்டாடுவோம்.

ஆனால் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களாகிய நாம் இப்படியான பண்டிகைகளை கொண்டாட முடிவதில்லை என்ற ஏக்கம் எம் போன்ற சிறுவர்களுக்கு இல்லாமல் இல்லை. ஆனாலும் இம்முறைத் தைப்பொங்கல் விடுமுறை தினமான ஞாயிற்றுக்கிழமை வருகின்றதல்லவா? முயற்சி செய்து ஓரளவாவது தைப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுவோமே!!

முகுந்தன் மகேந்திரன்.

## யார் திருடன் (முடிவு)

குமார்தான் திருடன். மோகன் திருடியிருந்தால் பாண்டியனும் குமாரும் சொல்வதாக இருக்கும். பாண்டியன் திருடியிருந்தால் மோகனும் குமாரும் சொல்வது உண்மையாக இருக்கும். ஆனால் ஒருவர் சொல்வது மட்டுமே உண்மையாக இருக்க வேண்டும். ஆகவே குமார் தான் திருடன். பலர் விடையளித்திருந்தாலும் இருவர் சரியான விடையை எழுதியிருந்தார்கள்.

அவர்கள்: ராகுலன் ஸ்ரீஜீவகன்
ராகவன் ஸ்ரீஜீவகன்

# பொங்கலோ பொங்கல்

இனித்திடும் தைப்பொங்கல்
திருநாளைக் கொண்டாட
காத்திருந்தோம் பலநாளாய்
விழித்துவிட்டோம் அதிகாலை

கோலமிட்டு முற்றத்திலே
குத்து விளக்கேற்றிடுவோம்
பாலெடுப்போம் பொங்கலுக்கு
பானையும் வாங்கிடுவோம்

புது நெல்லை அரிசியாக்கி
பதர் போக்கி உலையிட்டு

வெண்ணிறப்பால் பொங்கிவர
வெடி சுடுவோம் நாங்களுமே

வாழை,பலா,மாவின் கனிகள்
கரும்புநீரும் சர்க்கரையும்
இன்னமுதப் பொங்கலுண்ண
எழுந்து விட்டான் கதிரவனும்

பொங்கலோ பொங்கல்
பொங்கலோ பொங்கல்

முகுந்தன் மகேந்திரன்.

# புத்தாண்டும் நாங்களும்

புத்தாண்டு பிறந்துவிட்டது. நாங்கள் எமது தாய் நாடாகிய இலங்கையைவிட்டு ஐரோப்பிய மண்ணுக்கு வந்து ஓராண்டு கூடுகிறது. இந்த மண்ணில் பிறந்த தமிழ்ச் சிறுவர்களுக்கும் ஓராண்டு கூடுகிறது. சுருக்கமாகச் சொன்னால், எங்களுக்கும் தாய்நாட்டுக்கும் இடையிலுள்ள கால இடைவெளி ஒரு வருடத்தால் அதிகரிக்கிறது.

இவ்வாறாகக் காலம் உருண்டோடிக் கொண்டிருக்கிறது. எங்களுடைய வயதும் ஒவ்வொன்றாக கூடிக் கொண்டிருக்கிறது.

இந்த ஐரோப்பிய நாட்டில் வெளிநாட்டவருக்கு எதிரான சட்டங்களும், கெடுபிடிகளும் புதிது புதிதாகத் தோன்றிக் கொண்டே உள்ளன. வேலை இல்லாத் திண்டாட்டமும், வீடு இல்லாத பிரச்சினையும் குறிப்பாக ஜேர்மனியில் அதிகரித்துக் கொண்டே போகிறது. இந்தத் திண்டாட்டத்துக்கும் பிரச்சினைக்கும் காரணம் வெளிநாட்டவரின் வருகையே என்று ஜேர்மன் நாட்டு மக்களில் பெரும்பாலானோர் நம்புகிறார்கள்.

எனவே, ஜேர்மன் நாட்டவர்களைப் போல பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, ஒல்லாந்து, டென்மார்க், நோர்வே, இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய மக்கள் தங்களுடைய பிரச்சினைகளுக்கு வெளிநாட்ட வர்களே காரணம் என்று மேலெழுந்தவாரியாக நம் புகிறார்கள் என்பதைச் செய்திப் பத்திரிகைகளில் வெளியாகும் புள்ளி விபரங்கள் மூலம் அறிய முடியும்.

எனவே, காலப்போக்கில் ஐரோப்பிய நாட்டு மக்கள் வெளிநாட்டவர்களை வெளியேறு என்று ஏகமனதாகக் கூறினால், வெளிநாட்டவரில் ஒரு இனமான நாங்களும் இந்த நாட்டை விட்டு எமது தாய் நாட்டுக்குத்தான் போக முடியும்.

நாங்கள் எமது தாய் நாட்டுக்குத் திரும்பிச் செல்ல நேரிட்டால், அங்கே எமது மக்களுடன் கலந்து உரையாடவோ அல்லது தொழில் பார்த்து முன்னேறவோ, எமது தாய் மொழியாகிய தமிழை நன்றாகத் தெரிந்திருப்பது அவசியம்.

நாங்கள் இந்த நாட்டில் இருக்கும் பொழுது, இந்த நாட்டு மொழி எவ்வளவு அவசியமாகத் தெ ரிகிறதோ, அதேபோல எமது நாட்டில் எமது மொழி மிகமிக அவசியமாகும்.

எனவே, நாங்கள் எமது மொழியாகிய தமிழ் மொழியைத் தமிழ்ப் பாடசாலைகளிலோ அல்லது வீட்டிலோ கற்க வேண்டும். அத்துடன் 'சிறுவர் அமுதம்' போன்ற புத்தகங்களை வாசிப்பதன் மூலம் தமிழ் மொழியோடு எமது நாட்டு மக்களின் வாழ்க்கை முறைகளையும் ஓரளவேனு ம் அறிந்திருக்க வேண்டும்.

ஆகவே, பிறக்கும் புத்தாண்டில் நாங்கள் எல்லோரும் எமது தாய் மொழியாகிய தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வோம் என உறுதி பூண்போமாக.

---

முன் பக்கமாகப் பறப்பது போலவே, அதே தன்மையோடு அதே வேகத்தில் பின்னாலும், திரும்பாமல் பின் பக்கமாகச் செல்லக்கூடியது ஹமிங்பேர்ட் குருவி

வாத்துகள் தண்ணீரில் நீந்திக் கொண்டே நித்திரை செய்யும் ஆற்றல் பெற்றவை.

அவுஸ்ரேலியாவில் கறுப்பு அன்னம் இருக்கிறது. இதன் சிறகுகளின் நுனியில் வெள்ளை நிறம் உண்டு. சிவப்பு நிறமான அலகும் உண்டு. பார்ப்பதற்கு அழகான பறவைகளில் இதுவும் ஒன்று.

# சொற்களைக் கண்டு பிடியுங்கள் முடிவு

| | | | |
|---|---|---|---|
| இ–வ | வ–இ | தும்பி | மாரு |
| அரு | கதி | மகன் | மாருதி |
| அருமை | சமை | சதி | கரு |
| சந்தி | தை | சலி | அமை |
| மகள் | பல் | அரை | அமைதி |
| கமலி | பல்லி | இரு | சுரை |
| மலி | குடி | இருமல் | அழு |
| பதை | திட்டு | மல்லி | இல் |
| தைலம் | இழு | வள்ளி | வலி |
| திகழு | சமத்து | பரு | மரு |
| இரு | மத்து | பருந்து | அரி |
| இருட்டு | மறை | கதை | பதி |
| அருத்து | தெங்கு | துரை | வசி |
| மாது | குவயல் | சிவ | சில் |
| துரை | வயல் | சிவலை | வரை |
| மது | சுறு | வலை | கனி |
| பிடரி | பல் | மலடு | தினை |
| சுண்டல் | வரை | பிகு | தெரி |
| வகு | வரி | மடங்கு | சதி |
| ஊஞ்சல் | சுமை | தவி | சதிகள் |
| சல்லி | பல்கலை | தவில் | கள் |
| பகு | கலை | வில் | |
| துதி | அளி | கதி | |
| திரை | மே–கீ | சரி | |
| வஞ்சி | அடி | தென்னை | |
| சிந்தனை | கிணறு | கீ–மே | |
| விதி | ஊர் | தயிர் | |
| அணை | கதி | ஊறு | |
| அலை | திரு | கிட்டி | |
| கல் | மாசு | துஞ்சு | |

எல்லாப் பக்கத்தாலும் வரும் சொற்கள்:
மை, தை, மா.

**பதில் எழுதியவர்கள்:**

கௌரியன் குலேந்திரன்
கிரிசாந் மனோறஞ்சிதராசா
பாலகௌரி இராசையா
மோகன் இரத்தினசபாபதி
மேகலை மகேந்திரன்
சிவகுமார் சிவசுப்பிரமணியம்
வித்தியா சிவசுப்பிரமணியம்
ஜனார்த்தினி குணரட்ணம்
மஞ்சுளா சிவசம்பு
முகுந்தன் மகேந்திரன்
அஜந்தன் அருளானந்தசிவம்
றேகா தியாகேஸ்வரன்
ஜெயானந்தன் கண்ணன்
ஜெயதீபா இரத்தினசபாபதி
அஜந்தன் நகுலேஸ்வரன்
சிவதர்சினி சிவராஜா
சிவாஸ்கர் சிவராஜா
ராகுலன் சிறீஜீவகன்
ராகவன் சிறீஜீவகன்
தர்மினி கந்தசுவாமி
காந்தரூபன் சத்தியமூர்த்தி

அஜந்தன் அருளானந்த சிவம் பரிசு பெறுகிறார்.

ஆந்தையைப் பழைய ரோமானியர்கள் அதிகம் வெறுத்தார்கள். அதிஷ்டமல்லாத பறவையாக நினைத்து கையில் சிக்கும் ஆந்தையைத் தீயிட்டு அதன் சாம்பலைத் தைபர் நதியில் கரைத்தார்கள்.

# அமுதம் மாமா
# நினைவுப் போட்டி


'சிறுவர் அமுதம்' மாத சஞ்சிகையின் முன்னாள் ஆசிரியரான அமரர் சின்ன இராஜேஸ்வரன் அவர்களின் சிறுவர்களுக்கான இலக்கியப் பணியை நினைவுகூரும் முகமாக, சிறுவர்களுக்கான போட்டி இது.

சிறுவர்களே! நீங்கள் எதைப்பற்றியும் எவரைப்பற்றியும் எழுதி அனுப்பலாம். ஆக்கங்கள் கதையாகவோ, கட்டுரையாகவோ அல்லது கவிதையாகவோ, பாடலாகவோ அமையலாம். ஆனால் சிறுவர் அமுதம் சஞ்சிகையின் மூன்று பக்கங்களுக்குள் அடங்கத்தக்கதாக அமைய வேண்டும்.

சிறந்த மூன்று ஆக்கங்களுக்குத் தரமான பரிசுகளும், மற்றும் ஆறுதற் பரிசுகளும் உண்டு.

**ஆக்கங்கள் உங்கள் கையெழுத்தாகவே இருக்க வேண்டும். உங்கள் பெயர், விலாசம், வயது எழுதியிருக்க வேண்டும். இந்த ஆக்கம் என் கையெழுத்திலேயே எழுதியிருக்கிறேன். என்று எழுதி கையொப்பமிட வேண்டும்.**

**முடிவுதிகதி: 30.3.95**




மழைபொழியுது மழைபொழியுது மழைபொழியுதேடி
மரத்தில் இருந்து குருவியோடு மழைபொழியுதேடி

கூரைமீது தாரையாக குதித்துப் பாயுதேடி
கோழிச்சேவல் குனிந்து சோர்ந்து கூனிப்போகுதேடி

சோவென்று கச்சான் காற்றுச் சுழன்று வீசுதேடி
சும்மா நின்ற மரங்களெல்லாம் சுற்றி முறியுதேடி

சிலுசிலுக்குது வெள்ளம் பாயுது சில்லென்றிருக்குதேடி
சிறியகன்று தாயை நோக்கி ஓடிப்போகுதேடி

கிடுகிடுக்குது பல்லுக்கிட்டுது கூதலாகுதேடி
கிட்ட இருந்து நல்ல கதைகள் கேட்கச் சொல்லுதடி

கிரிசாந் மனோறஞ்சிதராசா

இம்முறை வந்த சில ஆக்கங்கள் தைமாதப் புத்தகத்தில் வெளிவரும்.



# சிறுவர் அமுதம்

ஈழம்
எங்கள்
நாடென்போம்!
இதற்கு
ஏது
ஈடென்போம் ?

—சின்ன இராஜேஸ்வரன்


Siruvar Amutham
Im Winkel.2
50189 Elsdorf
Tel.02271/66527
Konto 1146023746
Bankleitzahl: 37050299